பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 9 (24—7—72) திங்கள் வெளியூர்: ஆடி 10 (25 7—72) செவ்வாய் [இதழ்: 34

தமிழக முதல்வர் — தலைமையமைச்சர் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 24—

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்று மாலை தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து 15 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்தார்; அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களும் உடனிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராமையும், தொழில் வளர்ச்சித் துறையமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்தையும் முதல்வர் சந்தித்தார்.

உச்சவரம்பு மேலும் குறையும்— உழுபவருக்கே நிலம் சொந்தமாகும்

தனி நபருக்கு விதிவிலக்குகள் கூடாது

குத்தகைதாரருக்கு நிதியுதவத் தனி அமைப்பு

தமிழக அரசின் நில உச்சவரம்புக் கொள்கை — முதலமைச்சர்கள் மாநாட்டில் கலைஞர் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 24—

புதுடில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில், தமிழக அரசின் நில உச்சவரம்புக் கொள்கையை வலியுறுத்தினர்.

உழுபவனுக்கே நிலத்தை உரிமையாக்கும் வகையில் சட்டமியற்ற வேண்டும் என்றும், குத்தகையாளர்கட்கு நிதியுதவியளிக்கத் தனி வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு மத்திய அரசு முழு அளவு நிதியுதவி செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டில் ஐந்துபேருக்கு மேலுள்ள குடும்பத்தின் நில உச்சவரம்பை 40 ஏக்கரிலிருந்து 30 ஏக்கராகக் குறைக்கச் சட்டம் இயற்றப்படும் என்றும், விதைப் பண்ணை — பால் பண்ணை — கால்நடைப் பண்ணை ஆகியவற்றின் பேரால் விதிவிலக்கு அளிப்பது கூடாது என்றும் வலியுறுத்தினர். அவருடைய உரை வருமாறு:—

"தமிழ்நாட்டில் நாங்கள் 1961-ம் ஆண்டு நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டிருந்த பல்வேறு விதிவிலக்குகளை நீக்கி வந்திருக்கிறோம்; மேய்ச்சல் நிலங்கட்கும் — கரும்புத் தோட்டங்கட்கும் — மலை நிலங்கட்கும் அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகள் நீக்கப்பட்டுவிட்டன.

பால் பண்ணைகளுக்கென்றும், கால்நடைகளுக்கென்றும் (1961-ம் ஆண்டு சட்டத்தில்) அளிக்கப்பட்டிருக்கும் விதிவிலக்குகளையும் நீக்கிவிட முடிவு செய்திருக்கிறோம்.

மேலும் கல்வி — மருத்துவம் — சமயப் பணிகள் ஆகியவற்றுக்கான 'டிரஸ்டு'களுக்கு நில உச்சவரம்பு இல்லை என்று அளிக்கப்பட்டிருக்கும் விதிவிலக்குகளை நீக்கும் சட்ட வரைவு ஒன்று சட்டமன்றப் பொறுக்குக் குழுவின் ஆய்வில் உள்ளது.

இம்மாநாட்டிற்கான நிகழ்ச்சிக் குறிப்புகளில், நில உச்சவரம்பானது நல்ல பாசன வசதியுள்ள இருபோக நன்செய் நிலங்கட்கு 10 ஏக்கர் முதல் 18 ஏக்கருக்குள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்தக் கோட்பாட்டினை நாங்கள் ஏற்கனவே 1970-ம் ஆண்டு உச்சவரம்பு குறைக்கப்பட்டது முதல் செயல்படுத்தி வருகிறோம்.

நிகழ்ச்சிக் குறிப்புக்களில் கூறப்பட்டுள்ள 10 ஏக்கர் முதல் 18 ஏக்கர் வரையிலான நன்செய் நில உச்சவரம்புக்கும்—தமிழகத்தின் 15 ஏக்கர் உச்சவரம்புக்கும் அதிக வேறுபாடு கிடையாது.

ஐவருக்குமேல் இருக்கும் ஒரு குடும்பத்துக்கு 60 ஏக்கர் என இருந்த உச்சவரம்பைத் தமிழ்நாட்டில் 40 ஏக்கராகக் குறைத்துவிட்டோம்; இதை மேலும் குறைத்து 30 ஏக்கராக நிர்ணயிக்கலாமா என்று பரிசீலனை செய்து வருகிறோம்.

தனிப்பட்ட டிரஸ்டு நிலங்களையும் தனியாரின் சொந்த நிலங்களோடு சேர்த்தே உச்சவரம்புக்குக் கணக்கிட வேண்டும்.

சொந்தப் பாசன வசதியுடன் இருபோகம் விளையக்கூடிய செழிப்பான நிலங்கள் என்பதை எங்கள் மாநிலத்தில் பார்ப்பது அரிது; ஆகவே, 'சொந்தப் பாசன வசதியுள்ள நிலங்கள்' என்ற இந்தக் கேள்வி எங்களுக்குச் சிக்கலை உண்டாக்குவதாக இல்லை.

தனியாருக்குச் சொந்தமான விதைப் பண்ணைகள் — பால் பண்ணைகள் — கால்நடை வளர்ப்புப் பண்ணைகள் ஆகியவற்றுக்கு உச்சவரம்புச் சட்டத்திலிருந்து எவ்வித விதிவிலக்குகளும் அளிக்கப்படுவது கூடாது என்பது என் கருத்தாகும்.

உபரியாகக் கிடைக்கும் நிலங்களுக்கு நட்டஈடு வழங்குவதைப் பொறுத்தமட்டில், அது மார்க்கெட் விலைக்குக் குறைவாகவும் — அடுக்கு முறையிலும் கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

அடுக்குமுறை என்றால், அந்த உபரி நிலத்தின் அளவு அதிகமாக அதிகமாக — அதற்கான நட்டஈட்டுத் தொகை கணிசமாகக் குறைந்துகொண்டே வருவதாக இருக்கவேண்டும்.

நிலச் சீர்திருத்தத்தை யொட்டிய முக்கியமான ஒன்று, 'உழுபவருக்கே நிலம்' உரிமையாக்கப்படுவதாகும்.

இதற்கென குத்தகைகள் அனைத்தையும் பதிவு செய்யும் பணி எங்கள் மாநிலத்தில் நடந்தேறி வருகிறது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே 3-இலட்சம் குத்தகைகளுக்குமேல் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

இதேபோல், நாடு முழுமைக்கும் குத்தகைப் பதிவு தயாரிக்கப்பட வேண்டும்.

குத்தகைதாரர்களுக்கே நிலம் சொந்தமாக்க சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தச் சீர்திருத்தத்துக்கு ஏராளமாக நிதி தேவைப்படும்; எனவே, குத்தகையாளர் நிலத்தின் உரிமையை வாங்கி— அவர்களுக்குத் தேவையான கடனுதவி வழங்கிட 'குத்தகையாளர் நிதி உதவி வாரியம்' அமைக்கப்பட வேண்டும்.

இத்தகைய ஒரு நிதியுதவி அமைப்புக்குத் தேவையான முழு நிதியுதவியையும் மத்திய அரசு வழங்கிட முன்வர வேண்டும்."

ஏழைகளுக்குத் தரிசு நிலங்கள்

நடப்பு ஆண்டில் 75,000 ஏக்கர் வழங்கப்படும்

திருச்சி, ஜூலை 24—

நிலமில்லாத ஏழைகளுக்குச் சாகுபடிக்கான தரிசு நிலங்களை வழங்குவது என்ற கொள்கையின்படி, 1972—73-ல் ஏழைகளுக்கு வழங்குவதற்காக 75,000 ஏக்கரா இலக்கைத் தமிழக அரசு நிர்ணயித்திருக்கிறது.

தற்போது தமிழ்நாட்டில் நிலமற்ற ஏழைகளிடையே வழங்குவதற்காக 1,52,745 ஏக்கர் நிலம் உள்ளது; அதில் 75,099 ஏக்கரை நடப்பு ஆண்டில் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

மாவட்டவாரியாக நிலம் வழங்கப்படும் விவரம்:—

தர்மபுரி—20,000 ஏக்கர்.

இராமநாதபுரம்—8,000 ஏக்கர்.

திருச்சி, சேலம்—தலா 6,000 ஏக்கர்.

செங்கற்பட்டு, தென்னாற்காடு—தலா 2,000 ஏக்கர்.

நிலங்களை ஒதுக்குவது சம்பந்தமான அலுவலைக் கவனிப்பதற்காகத் தலா ஒரு தாசில்தார் உட்பட 27 சிறப்பு ஊழியர் யூனிட்டுகளையும் அரசு அனுப்பித்திருக்கிறது.

திண்டுக்கல்லில் இடது கம்யூனிஸ்டு குண்டர்கள் அராஜகம்

கழகத் தொழிற் சங்க அலுவலகத்துக்குத் தீ வைத்துக் கொளுத்தினர்

திண்டுக்கல், ஜூலை 24—

திண்டுக்கல் மதுரை ரோடு சவரியார்பாளையத்தில் புதிதாகத் திறக்கப்பட்டிருந்த திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அலுவலகக் கட்டடத்திற்கு 18—7—72 இரவு சுமார் 2 மணியளவில், இடது சாரிக் கம்யூனிஸ்டுக் குண்டர்கள் தீ வைத்துப் பொசுக்கிவிட்டனர்.

அலுவலகத்தில் இருந்த பேரறிஞர் அண்ணா — டாக்டர் கலைஞர் — மற்றும் கழகத் தலைவர்களின் திருவுருவப் படங்கள், முக்கியமான பதிவேடுகள், கழகக் கொடி—பேனர், சங்கப் பெயர்ப் பலகை மற்றும் ரீப்பர், கொடி மரம் போன்ற சுமார் ரூ 1 500 பெறுமானமுள்ள பொருட்களைத் தீ வைத்துப் பொசுக்கிவிட்டார்கள்.

சங்கத் தலைவர் பொன். சீனிவாசன், செயலாளர் பெ. கருப்பையா, துணைச் செயலாளர் எஸ். ஏ. சேதுராமலிங்கம், துணைத் தலைவர் மு.க. ஆசீர்வாதம், செயற்குழு உறுப்பினர்கள் பாஸ்டின் அப்துல் காதர் மற்றும் கழகத் தோழர்கள் க. மைக்கேல், அப்துல் பாரி, கே. ஜி. அந்தோணி, நகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் பார்த்து — போலீசில் புகார் செய்துள்ளனர்.

ஏற்கனவே 18—6—72 அன்று சங்க அலுவலகத் திறப்பு விழாக் கூட்டத்தை நடத்த விடாமல் ஒலி பெருக்கியை உடைத்தும் — லைட்டுகளை உடைத்தும் — கல்லெறிந்தும் இடது கம்யூனிஸ்டுக் குண்டர்கள் கலகம் செய்திருக்கின்றனர்.

சிம்சன் தொழிற்சாலையில் குழப்பத்தையும் — கொந்தளிப்பையும் உண்டாக்கியுள்ள சி.ஐ.டி.யூ. சங்கத்தைச் சேர்ந்தவர்கள், இங்கும் கடந்த 25 ஆண்டுகளாகத் தம்மிடம் இருந்த தொழிலாளர்கள் 300 பேர் முன்னேற்றச் சங்கத்தில் சேர்ந்துவிட்டதைப் பொறுமல், முன்னேற்றச் சங்க வளர்ச்சி கண்டு தாழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வாறு தொடர்ந்து கலவரங்களைச் செய்து வருகின்றனர்.

தொழு நோயாளிகட்கு விடுதிகள்

மேலும் 7 இடங்களில் அமையும்

தஞ்சை, ஜூலை 24—

"தமிழ்நாட்டில் 5,000 தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு 10 விடுதிகள் கட்டப்படும்" என்று சமூக நலத் துறைச் செயலாளர் டி. கே. ஒசா கூறினர்.

செங்கற்பட்டு—தென் ஆற்காடு மாவட்டம்—தர்மபுரி ஆகிய மூன்று இடங்களில் 3 விடுதிகள் ஏற்கனவே திறக்கப்பட்டுவிட்டன; மேலும் 7 விடுதிகள் திறக்கப்படும்.

ஒவ்வொரு விடுதியும் ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

இந்த விடுதிகளில் கோழிப் பண்ணை அமைத்தல் — தோட்டம் போடுதல் போன்ற வேலைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்குள்ளவர்களுக்கு வாரத்திற்கு 50 காசு முதல் ரூ. 2 வரை ஊதியம் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிகுவிளைச்சல் தரும் நெல் சாகுபடி

நடப்பு ஆண்டில் 55 இலட்சம் ஏக்கர்

சென்னை, ஜூலை 24—

இந்த ஆண்டு தமிழ் நாட்டில் அதிக விளைச்சல்தரும் புதியரக நெல் விதைகள் 55 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்படும்.

சென்ற ஆண்டு இந்த விதைகள் 51 இலட்சம் ஏக்கர் அளவில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

மாநில வேளாண்மைத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தது, 'இதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன' என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் பேராசிரியர் டில்லி பயணம்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஜூலை 25, 26 ஆகிய நாட்களில் புதுடில்லியில் நடைபெறும் மக்கள் நல்வாழ்வு அமைச்சர்கள் மாநாட்டிலும், ஜூலை 28-ஆம் நாள் திட்டக் குழுச் சார்பில நடைபெறும் கூட்டத்திலும் கலந்துகொண்டுவிட்டு ஜூலை 29-ஆம் நாள் சென்னை திரும்புகிறார்.

தொழிலாளர் நல்வாழ்வுக்குப் புதியதோர் வடிவம்

நல்வாய்ப்புக்கள் பெருக--சட்டங்கள் செவ்வனே செயல்படச் செய்வதே தமிழக அரசின் நோக்கம்

நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்கள் பயனற்று--பொருளற்றுப் போகும் நிலை நீடிக்கக்கூடாது

தகராறுகட்கு விரைவில் தீர்வு காண்பது அவசியம்--தொழிலாளர் நல அதிகாரிகளிடையே அமைச்சர் என். வி. நடராசன் ஆய்வுரை

குற்றாலம், ஜூலை 22

"தொழிலாளர் பாதுகாப்பு -- அவர்களது நல்வாழ்வு ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்குடன், தனியார் துறை -- பொதுத் துறைகளும் பாகுபாடின்றி பல்வேறு தொழிலாளர் சட்டங்களைச் செவ்வனே செயல்படுத்துவதும அரசின் கொள்கையாகும்.

"அண்மையில் தொழிலாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கென நமது திட்டங்களுக்குப் புதியதோர் வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது; அதற்காகத் தொழிலாளர் நலத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

"தொழிலாளர் நலச் சட்டங்கள் செயலில் இராத பகுதிகளில் தொழிலாளர்களின் நல்வாழ்விற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்; இத்திட்டத்தின் மூலம் நாளடைவில் இம்மாநிலத் தொழிலாளர்தம் வாழ்க்கையில் மென்மேலும் நல்வாய்ப்புக்கள் பெருகும்"

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், தொழிலாளர் நல அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர்; மேலும் அவர், பல்வேறு சூழ்நிலைகளை அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டிக் கூறியதாவது:—

ஊறு ஏற்படுகையில் அரசு தலையிடாதா?

"தொழில் அமைதியைப் பாதுகாத்து வளர்ப்பதும் தொழில் வளம் ஏற்பட்டுத் தொழிலாளர் நலம் பெருகும் சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவதும் இவ்வரசின் நோக்கமாகும்; இக்கொள்கை, 'வளர்க தொழில் -- வாழ்க தொழிலாளர்' எனும் குறிக்கோளில் இழைந்தோடி இருப்பதைக் காணலாம்.

கூட்டாகப் பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படும்; அதே நேரத்தில் தொழில் நலனும் -- தொழிலாளர் நலனும் மட்டும் அல்லாமல் சமுதாய நலனையும் பாதுகாக்கவேண்டியிருப்பதால், தொழில் அமைதிக்கும் -- உற்பத்திக்கும் ஊறு ஏற்படும்போது அரசு தலையிட்டுத்தான் ஆகவேண்டும்.

நிலைமைக்கேற்பச் செயல்பட வேண்டும்

தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் உங்கள் நேர்மையாலும் -- பாரபட்சமற்ற போக்காலும் இரு தரப்பினரின் நம்பிக்கையையும் நீங்கள் பெறுதல் வேண்டும்.

தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றித் தெளிந்த அறிவும், தொழிலாளர் துறையில் அனுபவமும் பெற்றிருந்தாலன்றி இத்தகைய கடினமான -- இக்கட்டான அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்றுவதென்பது இயலாது; தொழில் தகராறுகளில் உடன்பாடு காணுவதில் ஊக்க முயற்சி -- நிலைமைக்கேற்பச் செயல்படும் திறமை இவற்றை நீங்கள் பெரிதும் பயன்படுத்தவேண்டும்.

பிரச்சினைகளைச் சமாளிக்க இடையீடற்ற முயற்சி

பஞ்சாலைத் தொழில் -- சர்க்கரைத் தொழில் -- மலைத் தோட்டத் தொழில் -- பொறியியல் தொழில் போன்றவைகளில் தொடர்ந்து ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சினைகளைச் சென்ற ஆண்டில் இத்துறை சமாளிக்க வேண்டியிருந்தது.

இத்தகைய தகராறுகள் -- கிளர்ச்சிகள் காரணமாகவும், இத்துறையும் தொடர்ந்து அக்கறைகொண்டு இடையீடற்ற முயற்சி மேற்கொள்ள வேண்டிவந்தது; இந்தக் கடுமையான பணியில் முதலமைச்சரின் ஆதரவு எனக்கு எப்போதும் உறுதுணையாக இருந்துவருகிறது; ஏற்றமிது ஆலோசனைகளையும் -- அறிவுரைகளையும் நல்கித் தொழிலாளர் நலனுக்கு வழிகாட்டியமைக்காக அவருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அண்மையில் சிம்சன் கம்பெனித் தொழிலாளர் சங்கத்தின் தேர்தல்களை நடத்தியதில், வரலாறு காணாத வகையில் மேற்கொண்ட பொறுப்பு உட்பட இக்கட்டான பல நிலைமைகளில் எனக்கு முழுஒத்துழைப்புத் தந்து உதவிய இத்துறையின் அதிகாரிகள் -- பணியாளர்கள் ஆகியோரது பணியைப் பாராட்டவும் இந்த வாய்ப்பினை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

உற்பத்தி பாதிக்க வழிகோலப்படுகிறதா?

தொழில் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் -- ஊதிய ஒப்பந்தங்கள் ஆகியவற்றை இரு தரப்பினரும் மதிப்பதில்லை என்பதை அண்மையில் பார்த்து வருகிறோம்.

ஒப்பந்தம் நடைமுறையிலுள்ள காலத்தில் ஊதியங்களைத் திருத்தியமைக்கக் கோருவதால் தொழிலாளர்களிடையே அமைதியின்மை ஏற்படுவதுடன் உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது; இதனால் இரு தரப்பினரும் நீண்ட நாட்களாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் பயனாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள் பயனற்று -- பொருளற்றுப் போகின்றன.

இந்நிலை இனி ஏன்?

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியதுதான்; ஆனால் அதே சமயத்தில், நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலமாகவோ அல்லது வன்முறையின் மூலமாகவோ -- நிர்வாகத்தை எதிர்ப்பதன் மூலமாகவோ தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சிப்பது அகற்றப்பட வேண்டும்.

நமது மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் இவ்வாண்டு மே திங்களில் உதகையில் கூடியபோது இதுபற்றி ஆராய்ந்தது; ஒப்பந்தங்களை மதித்து நடக்கவேண்டுமென்றும் -- ஒப்பந்தங்களுக்கு முரணாக நடக்கும் போக்கு தடுக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒழுங்கற்ற போக்கு--தடுத்து நிறுத்துவது அவசியம்

வாரியத்தின் முடிவை கருத்தில் கொண்டு ஒரு தொழிற் சங்கத்திற்கும் -- இன்னொரு தொழிற் சங்கத்திற்குமிடையே போட்டி மனப்பான்மை காரணமாக ஒப்பந்தங்களை உடைக்கும் போக்கைத் தடுத்து நிறுத்தச் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைக் கருதி அத்தகைய ஒழுங்கற்ற போக்கினை அகற்றுமாறும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குறைகூற இடந்தராதீர்

தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதில் அடிக்கடி காலதாமதம் ஏற்படுவதாகச் சட்டமன்ற உறுப்பினர்கள், கடந்த வரவு -- செலவுத் திட்டக் கூட்டத்தின்போது புகார் செய்தனர்; பொதுமக்கள் குறைகூறுவதற்கு இடமின்றி தொழிலாளர் தகராறுகளுக்கு விரைவில் தீர்வுகாணுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாநிலத் தொழிலாளர் நலத் துறை, 'திறமை படைத்தது' என்ற நல்ல பெயர் எடுத்துள்ளது; இச்சிறந்த புகழ் மேன்மேலும் ஓங்கும் வகையில் பணியாற்றுவதற்கு நீங்கள் முனைந்து செயல்படவேண்டும்.

நடைமுறைக்கு வருகையில் திறமையுடன் செயல்படுத்துவீர்

தற்போது செயலில் உள்ள தொழில் தகராறுகள் சட்டம் -- தொழிற்சங்கங்கள் சட்டம் -- தொழில் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம் ஆகியவற்றிற்குப் பதிலாகத் தொழில் உறவுகள் சட்டம் ஒன்றைப் புதிதாகக் கொண்டு வருவது பற்றி இந்திய அரசு பரிசீலித்து வருகிறது.

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்து ஏற்பளித்தல் -- தொழிற் தகராறுகளுக்கு தீர்வு காணுதல்- நிலை ஆணைகளுக்குச் சான்றளித்தல் ஆகியவற்றிற்கு இச்சட்டம் வகை செய்கிறது.

1972 மே மாதம் நடந்த தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் மேற்சொன்ன செயற்குறிப்புப் பற்றி விவாதிக்கப்பட்டது; இம்மாநாட்டில் நானும் -- அரசுச் செயலாளரும் (தொழிலாளர் நலத்துறை) -- தொழிலாளர் நலத்துறை ஆணையரும் கலந்துகொண்டோம்; இந்தச் சட்டம் செயலுக்கு வரும்போது, தொழிலாளர் நலனையும் -- தொழில் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, இச் சட்டத்தின் விதித்துறைகளை உங்கள் திறமையால் செயல்படுத்த முடியும் எனத் திண்ணமாக நம்புகிறேன்.

சாலைப் போக்குவரத்து ஊழியர்கட்கான ஊதியப் பரிவுரை

சட்டம் இயற்ற யோசனை

நியாயமான ஊதியங்களைப் பொறுத்தவரையில் பஞ்சாலைகள் -- பொறியியல்--மின்சாரம்-- சாலைப் போக்குவரத்து -- தோல், சர்க்கரை, உரம் போன்ற பல்வேறு தொழில்களுக்கு மத்திய ஊதிய வாரியம் செய்துள்ள பரிவுரைகள் நம்மிடம் உள்ளன.

சர்க்கரை, சிமெண்டு ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைப் பொறுத்தவரையில், இம்மாநிலத்தில் இத்தொழிற்சாலைகள் அனைத்தும் அப்பரிவுரைகளைச் செயல்படுத்தியுள்ளன என்று எனக்குத் தெரியவருகிறது.

பஞ்சாலைத் தொழில் -- தோல் தொழில் -- உரத் தொழில் ஆகியவை குறித்து ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதையும் அறிவேன்.

1971 ஆகஸ்டில் நாம் கூடிய போது சாலைப் போக்குவரத்துத் தொழிலர்கான ஊதிய வாரியப் பரிவுரைகளை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினேன்; இதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்! ஆனால் இதில் இன்னும் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்று அறிகிறேன்.

எனவே, இத்தொழிலுக்கான ஊதிய வாரியத்தின் பரிவுரைகளுக்குச் சட்டச் செயற் திறன் அளிக்கும்பொருட்டு, வேறு சில மாநிலங்களில் இயற்றப்பட்டுள்ள சட்டத்தையொட்டிச் சட்டம் இயற்றும் கருத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

தொழிலாளர்களின் நலன்களைக் கட்டிக்காக்க இயற்றப்பட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் பல்வேறு விதித்துறைகளைச் செவ்விய முறையில் செயல்படுத்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

எண்ணூரில் தொழிற் பயிற்சி நிலையம்

கோத்தாரி அறநிறுவத்தினர் ஏற்படுத்துவர்

சென்னை, ஜூலை 22—

கோத்தாரி அறநிறுவனத்தால் எண்ணூரில் விரைவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் தவக்கப்படும்: அப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வேண்டிய வேலைகளுக்கான பயிற்சி அதில் அளிக்கப்படும்.

தொழில் துறைக்குப் பொறியியல் மத்திய பாலிடெக்னிக் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் சிறப்புரையாற்றுகையில், தமிழ்நாடு தொழில் நுணுக்கக் கல்வி இயக்குநர் சிவலிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

"முதலில் அங்கு 6 முக்கியத் தொழில்களில் பயிற்சியளிக்கப்படும்; அதில் பயிற்சி பெற்றவர்களுக்கு அப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் இடம் கிடைக்கும்" என்றும் அவர் சொன்னார்.

இந்தக் கருத்தரங்கில் கோத்தாரி தொடக்க உரையாற்றுகையில், எண்ணூரில் தொடங்கப்பட இருக்கும் நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் உடனே தொழிற்சாலையில் அந்த வேலைகளைச் செய்வதற்கு ஏற்ற முறையில் அவர்களுக்கு நேரடியான பயிற்சி தரப்படும் என்றும், வட சென்னையில் உள்ள 70 அல்லது 80 தொழிற்சாலைகளின் தேவையை இப்படிப்பட்ட ஒரு தொழிற்பயிற்சி நிலையம் நிறைவு செய்யமுடியும் என்றும் சொன்னார்.

மதவாதிகள் ஓலம்!

டில்லி, ஜூலை 22—

"பல்வேறுபட்ட நிலவுடைமை உச்சவரம்புச் சட்டங்களிலிருந்து மத நிறுவனங்களின் அறக் கட்டளைகளுக்கு விலக்கு அளிக்காவிடில், சுமார் 10 000 மடங்கள் -- ஆலயங்கள் -- மசூதிகள்-- மாதாகோவில்கள், தங்கள் மத ஆசாரங்களையும், சமூக நலப் பணிகளையும் நிறுத்தவேண்டியிருக்கும்; 5 இலட்சம் சாதுக்கள் -- பக்கிரிகள் -- பாதிரிகள் வேலையிழக்க நேரிடும்"

என்று, அனைத்திந்திய சாது சமாஜத் தலைவர் குருசரண் தாஸ்ஜி என்பவர், தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்; 'நிலவுடைமை உச்சவரம்புச் சட்டத்திலிருந்து மத அறக் கட்டளை நிலங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும்' எனக் கோரும் மனு ஒன்றையும் அவர் தலைமையமைச்சரிடம் அளித்தார்.

வணிகர்கள் ஏய்ப்பு -- அமைச்சர் என். வி. என். அறிவிப்பு

'பொய்யான--எடைகள் அளவைகள் பயன்படுத்துவது சமூகக் கேடாகும்'

'பொதுமக்களை ஏமாற்றும் இத்தீங்கினைக் களைந்தெறிய உறுதியுடன் செயல்படவேண்டும்'

குற்றாலம், ஜூலை --22

"எடைகள் -- அளவைகள் துறையில் கடந்த சில காலமாக வணிகர்கள், பொய்யான -- சரி பார்த்து முத்திரையிடப்படாத எடைகள் -- தராசுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வருவது குறித்துப் புகார்கள் வந்துள்ளன.

"வணிகத்தில் அவ்வாறு பொய்யான எடைகள் -- அளவைகள் பயன்படுத்தப்படும் நிலை நிலவுதல் சமூகக் கேடு ஆகும்; இக்கேடு உறுதியுடன் களையப்படவேண்டும்.

"தணிக்கையாளர்கள் தங்கள் வேலையில் தீவிரக் கவனம் செலுத்தி தணிக்கையை ஊக்கத்துடன் செய்வதன்மூலம்தான் இதில் முன்னேற்றம் காணமுடியும்.

"தங்களிடம் பொருள்கள் வாங்கும் பொதுமக்களை ஏமாற்றுகின்ற வணிகர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன்மூலம் அவர்களது ஏய்ப்பை வெளிப்படுத்துவதில் விழிப்பாக இருக்கவேண்டுமென அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்."

—தொழிலாளர் நல அதிகாரிகள் மாநாட்டில்

★★

மதுரை மாவட்ட

தி. மு. கழக 5-வது மாநாடு

1972 ஆகஸ்டு 5, 6 (சனி -- ஞாயிறு) ஆகிய நாட்களில்

மதுரை பந்தயத் திடலில்-- வி. எஸ். எஸ். மணி பந்தலில் --- நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அரங்கத்தில் நடைபெறும்.

தலைவர் :	திறப்பாளர் :	அண்ணா படத் திறப்பாளர் :
முரசொலி மாறன் எம். பி.	எல். கணேசன் எம். எல். ஏ.	பி. கே. மூக்கையா தேவர் எம். பி.

கழகத் தலைவர் பொதுச்செயலாளர் பொருளாளர்--புரட்சிநடிகர்

டாக்டர் கலைஞர் -- டாக்டர் நாவலர் -- எம். ஜி. ஆர்.

மற்றும் அமைச்சர்கள்--நாடாளுமன்ற -- சட்டமன்ற -- உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் -- கழக முன்னணியினர் கலந்துகொள்வர்

இரு நாட்களுக்கும் சேர்த்துக் கட்டணம் : ரூ. 10; 5; 2. --- --- பெண்களுக்கு ரூ 1.

4--8--72 அன்று மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

வரவேற்புக் குழுத் தலைவர் :	செயலாளர்கள் :	பொருளாளர் :	தொண்டர் படைத் தலைவர்கள் :
எஸ். முத்து எம். எல். சி.	பி. எஸ் மணியம் எம். எல். ஏ., கு. திருப்பதி எம். எல். ஏ. காவேரி மணியம் எம். எல். ஏ.	வெங்கிடசாமி	பொன். முத்துலிங்கம், மு. சாதர்சா, திருமதி தேவகி பாண்டியன் எம். சி. ஏ. மி. இராசு பொ. இராமச்சந்திரன்

★★

வட்டாரஉணர்வுவலுக்கிறது

ஒருமைப்பாட்டு உபதேசம் வடமாநிலங்களுக்கு இல்லையா?

சொந்தமாநிலத்தில் வெளிமாநிலத்தவர் வேலைபெறுவதற்கு எதிர்ப்பு

கல்கத்தா ஜூலை 22

வட்டார மக்களுக்கே வேலைவாய்ப்புக்களில் முதலிடம் தரவேண்டும் என்ற கோரிக்கை நாளும் வலுப்பெற்று வருகிறது.

பீகார் மாநில முதலமைச்சர் கேதார்பாண்டே, தமது மாநிலங்களில் தொழில் நடத்துபவர்கள் 90 சதவிகித பதவிகளை வட்டார மக்களுக்கே அளிக்கவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்.

மேற்குவங்கத்திலிருந்து தொழில் அதிபர்களைத் தமது மாநிலத்திற்கு வருமாறு அழைக்க திரு. பாண்டே அண்மையில் கல்கத்தாவுக்கு வந்திருந்தார்; அப்போது அவர், 'பீகாரில் தொழில் துவங்க முன்வருபவர்கள், 5 சதவிகிதம் முதல் 10 சதவிகிதம் வரையிலான நிபுணர்களைத்தான் வெளியிலிருந்து அழைத்து வரவேண்டுமென்று நிபந்தனை விதித்தார்; "வேலையில்லாத் திண்டாட்டத்தை வட்டார அளவில் தான் தீர்க்கமுடியும்" என்றும் அவர் கருத்துத்தெரிவித்தார்.

மேற்கு வங்கத்திலும் -- அசாமிலும், வட்டார மக்களுக்கே வேலைவாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது; அந்தந்த மாநில அரசுகளும் இதற்கு ஊக்கம்தந்து வருகின்றன.

இந்தக் கோரிக்கையில் முன்னோடியாக பீகார் மாநிலம் இருந்து வருகிறது.

டாட்டா உருக்கு நிறுவனம் போன்ற சில நிறுவனங்கள், பீகார் அரசின் நிர்ப்பந்தங்களுக்குப் பணியவேண்டியதாகயிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

மத்திய அரசு நிறுவனங்கள் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவருதாகக் கூறப்படுகிறது; ஆயினும், பீகாரில் அமைத்துக்கொண்டு வரும் பெரிய உருக்கு ஆலையான பொகாரோவில் வட்டார மக்களையே வேலைக்கு அமர்த்த வேண்டுமென்ற கோரிக்கையில் மாநில அரசு கணிசமான வெற்றியடைந்து வருவதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்கட்கு உதவிப் பணம்

புதுடில்லி, ஜூலை 24—

"விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் உதவிப் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ இதுவரையில் 1945 பேருக்கு உதவிப் பணம் வழங்குமாறு தற்காலிக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது"

என்று மத்திய உள்துறை அமைச்சர் கே. சி. பந்த் நிருபர்களிடம் கூறினர்.

இத்திட்டம், இவ்வாண்டு ஆகஸ்டு 15-ந் தேதியிலிருந்து செயலுக்கு வரும்.

இத்திட்டத்தின்கீழ் இம்மாதம் 15-ம் நாள்வரை 69,064 மனுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; அவற்றில் இதுவரை 7,604 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன; 5,659 மனுக்கள் சம்பந்தமாக விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன; 1945 பேருக்கு உதவிப் பணம் வழங்குமாறு தற்காலிகமாக உத்தரவிடப்பட்டுள்ளது.

சோஷலிச -- விஞ்ஞான அடிப்படையில் கல்வி

மத்திய கல்வியமைச்சர் வலியுறுத்தல்

புதுடில்லி, ஜூலை 24—

"தொலைதூரப் பகுதிகளிலுள்ள குக்கிராமங்களிலும்கூட துவக்கக் கல்வி வசதி கிடைக்கச் செய்யக்கூடிய கல்வி வசதியைப் பரப்பும் திட்டம் ஒன்றை உருவாக்கித் தரவேண்டும்"

என்று கல்வித் துறை நிபுணர்களை மத்திய கல்வியமைச்சர் பேராசிரியர் நூருல் ஹாசன் கேட்டுக் கொண்டார்.

கல்வித்துறை ஆராய்ச்சி -- பயிற்சி ஆகியவற்றுக்கான தேசிய கவுன்சிலின் ஆண்டுக் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"வானொலி -- பத்திரிகைகள் -- திரைப்படம் போன்ற அறிவு பரப்பும் சாதனங்கள் கல்வித் துறையினருடன் இணக்கமாகச் செயல்பட்டால்தான், அரசியல் சட்டத்தில் கல்விபற்றி விதிக்கப்பட்டுள்ள கட்டளைக் கொள்கை இலக்குகளை நிறைவேற்றிவைக்க முடியும்.

நாம் உருவாக்கும் கல்வி முறை, வகுப்புவாதம் -- சாதி வெறி போன்ற தீமைகளை அகற்றி, ஒரு விஞ்ஞான ரீதியான கண்ணோட்டத்தைக் குழந்தைகளிடம் வளர்ப்பதாக இருக்கவேண்டும்.

கல்வி முறை, சோஷலிச இலட்சியம் கைகூடுவதற்கு உதவுவதாக இருக்கவேண்டும்.

நாடு முழுவதிலும் ஆசிரியர் வேலைக்கு இன்னும் நிறைய பேரைச் சேர்த்தாகவேண்டியது அவசியமாகும்."

16 மாநிலங்களைச் சேர்ந்த கல்வி அமைச்சர்களும் -- கல்வித் துறை நிபுணர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அணுகுண்டு தயாரிக்கும் வசதி இந்தியாவில் உள்ளது

அமெரிக்க -இரஷ்ய நிபுணர் குழுக்கள் அறிக்கை

சீனாவின் மிரட்டலைச் சமாளிக்க இந்தியா -- ஜப்பான் நாடுகளின் நிர்ப்பந்த நிலை

நியூயார்க், ஜூலை 22--

"அணு ஆயுதப் பரவல் கட்டுப்பாட்டின்கீழ் வராதவகையில், 10 அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்கு வேண்டிய 'புளூடோனியம்' இந்தியாவிடமும், 8 குண்டுகளைத் தயாரிப்பதற்கு வேண்டிய 'புளூடோனியம்' இஸ்ரேலிடமும் இருக்கின்றன" என்று நிபுணர் குழு ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

அணு ஆயுதப் பரவலைத் தடுப்பது சம்பந்தமாக ஐ. நா. சார்பில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க நிபுணர் குழுவின் அறிக்கை இது.

இதேபோல், ஐ. நா. சார்பில் ஆராய்ச்சி நடத்தும் இரஷ்ய நிபுணர்கள் குழுவும் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது

1970-ம் ஆண்டைய அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்பாட்டில் இன்னமும் கையெழுத்திடாத அணு ஆயுதங்கள் வைத்திராத நாடுகளுள் இந்த இரு நாடுகள் மட்டுமே அணு உலைகளை வைத்துள்ள நாடுகளாகும்" என்று இந்த அறிக்கை கூறுகிறது.

இந்தியாவிடம் 85 கிலோ புளூடோனியம் இருக்கக்கூடும் எனவும். இஸ்ரேலிடம் சுமார் 40 கிலோ புளூடோனியம் இருக்கக் கூடுமென்றும் இது கூறுகிறது.

"நடுத்தர அளவுள்ள ஒரு நகரை அழிப்பதற்கு வேண்டிய ஒரு குண்டு தயாரிக்க 5 முதல் 10 கிலோ வரை புளூடோனியம் இருந்தால் போதும்" என்றும் இது கூறுகிறது.

"அணு உலைகளையும் -- புளூடோனியத்தையும் அனைத்துநாட்டு அணுசக்தி நிறுவனத்தின் நிபந்தனைகளின்கீழ் கொண்டுவரவேண்டியது அவசியமாகும்; அதற்கான அதிகபட்ச முயற்சிகளைச் செய்தாக வேண்டும்" என்று அமெரிக்க நிபுணர் குழு அறிக்கை கூறுகிறது.

இந்த ஆண்டு ஜூன் திங்கள் இறுதிவரையில், அணு ஆயுதங்கள் வைத்திராத 102 நாடுகள் இந்த உடன்பாட்டில் கையொப்பமிட்டுள்ளன; அவற்றுள் 71 நாடுகள் உடன்பாட்டை உறுதி செய்துள்ளன.

அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடுகளில் சீனா -- பிரான்சு ஆகிய இரண்டு இன்னமும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

சீனா இன்னமும் தனது ஆயுத வலிமையைப் பெருக்கிக் கொண்டே போவதால், இந்தியா -- ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் இராணுவ நிலைமை மிகுந்த நிர்ப்பந்தத்துக்கும் சிரமத்துக்கும் உள்ளாகியிருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

எனவே, 'பீகிங்குடன் ஒரு நிலையான அரசியல் தன்மைக்கு வழிவகை கண்டாகவேண்டிய பொறுப்பு அமெரிக்காவுக்கும் -- இரஷ்யாவுக்கும் உண்டு' என்பதை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

ஊழியர்களே இல்லாத உ. பி. பத்திரிகைகள்

ஊதியக் குழுப் பரிந்துரையிலிருந்து தப்பிக்கும் தந்திரம்

கான்பூர், ஜூலை 22—

ஊழியர்களே இல்லாமல் உத்தரப் பிரதேசத்தில் சில பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றனவாம்!

உத்தரப் பிரதேசத்தில் வெளியிடப்படுவரும் 50 செய்தித் பத்திரிகைகளில் 24 பத்திரிகைகளுக்கு உழைக்கும் பத்திரிகையாளர்களே இல்லையாம்.

இவைகளில் 11 பத்திரிகைகளில் பத்திரிகையாளரல்லாத ஊழியர்கள்கூட வேலை செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இத்தகவலை, உ. பி. தொழிலாளர் நலக் கமிஷனர் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

25 பத்திரிகைகள் உழைக்கும் பத்திரிகையாளர் ஊதியக் குழுவின் பரிந்துரையைச் செயல்படுத்தியிருப்பதாகவும், 32 பத்திரிகைகள் பத்திரிகையாளரல்லாத ஊதியக் குழுப் பரிந்துரையை செயல்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நில உச்சவரம்பு--1972 இறுதிக்குள் எல்லா மாநிலங்களிலும் சட்டம்

1971 சனவரி 24 முதலே செயல்படுத்தப்படும்

30 ஏக்கருக்குமேல் எந்தக் குடும்பத்துக்கும் நிலம் இருக்காது

சென்னை, சூலை 24—

இந்தியா முழுவதிலும் ஒரே மாதிரியாக -- ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 10 ஏக்கர் முதல் 18 ஏக்கர் இருபோக நஞ்சை நிலம் உச்சவரம்பமாக நிர்ணயிக்கப்படும். ஒரு குடும்பம் என்பது, கணவன் -- மனைவி -- 3 மைனர் குழந்தைகள் கொண்டதாகும்! வயது வந்த பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனிக் குடும்பமாகக் கருதப்படுவார்கள். அவர்களுக்குத் தனியாக உச்சவரம்பு இருக்கும்.

இரண்டு போகம் விளையும் நிலங்களுக்குத்தான் 10 ஏக்கர்முதல் 18 ஏக்கர் உச்சவரம்பாகும். ஒரு போகம் விளையும் நிலங்களுக்கு உச்சவரம்பு 27 ஏக்கராகும்; புன்செய் நிலங்களுக்கு உச்சவரம்பு 54 ஏக்கர்களாகும்.

ரப்பர் தோட்டம், காபி -- தேயிலைத் தோட்டம் ஆகியவற்றுக்கு இந்த உச்சவரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.

பழத் தோட்டங்கள் -- புன்செய் நிலங்களாகக் கருதப்படும்.

விதைப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கும் உச்சவரம்பிலிருந்து விலக்கு உண்டு.

புதுடில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், நிலங்களுக்கு உச்சவரம்பு விதிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு இம்முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன; இந்த முடிவுகளுக்கு ஏற்றவகையில் இந்த ஆண்டு முடிவுக்குள் நில உச்சவரம்புச் சட்டங்களை மாற்றியமைக்குமாறு எல்லா மாநில அரசுகளும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிலச் சீர்திருத்தங்கள்பற்றிப் பரிசீலனை செய்த முதலமைச்சர்கள் மாநாட்டிற்கு மத்திய அரசின் வேளாண்மைத் துறை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது தலைமை தாங்கினார்; மாநாட்டின் முடிவில் அவர் கூறியதாவது:—

மாநாட்டின் முடிவுகள்-மத்திய அமைச்சர் விளக்கம்

"முதலமைச்சர்கள் மாநாட்டின் முடிவுகளுக்கு ஏற்றவாறு தங்களுடைய நிலச் சீர்திருத்தச் சட்டங்களைத் திருத்தியமைக்கும்படி எல்லா மாநிலங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

விவாதங்கள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக நடைபெற்று உச்சவரம்பு சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளும் நன்கு ஆராயப்பட்டன; முதலமைச்சர்கள் ஒருமனதான முடிவுக்கு வந்தார்கள்.

உச்சவரம்பு நிர்ணயம்

தனிப்பட்ட நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களுக்குச் சிறிது சலுகை அளிக்கப்படும்; அதாவது, ஒவ்வொரு மாநிலத்திலும் நிர்ணயிக்கப்படும் உச்சவரம்புக்குமேல் இதற்கு ஒரு ஏக்கர் அல்லது ஒன்றரை ஏக்கர் கூட்டி உச்சவரம்பு நிர்ணயிக்கப்படும்; அல்லது 1:1.25 என்ற விகிதத்தில் இருக்கும்; அதே நேரத்தில் இதன் உச்சவரம்பும் 18 ஏக்கருக்குமேல் போக அனுமதிக்கப்படமாட்டாது.

பூமியில் தோண்டப்பட்ட கிணறுகளும் -- குளங்களும் -- குழாய்க் கிணறுகளுக்குச் சமமாகக் கருதப்படலாமா என்பதைச் சம்பந்தப்பட்ட மாநிலங்களே முடிவு செய்யும்.

ஒரு போக நிலங்களுக்கு 27 ஏக்கர் உச்சவரம்பாக இருக்கும்; புன்செய் நிலங்களுக்கு 54 ஏக்கர் உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டிற்கு மட்டும் ஒரு விதிவிலக்காக இதை 60 ஏக்கராக நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

விதிவிலக்குகள்

தேயிலை, காபி, ஏலக்காய், ரப்பர் தோட்டங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

பழத் தோட்டங்கள் எல்லாம் புன்செய் நிலங்களாகக் கருதப்படும்; அவைகளின் உச்சவரம்பு 54 ஏக்கராக இருக்கும்; தமிழ்நாட்டிற்கு மட்டும் இது விதிவிலக்காக 60 ஏக்கராக அனுமதிக்கப்படும்.

அற நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் -- உண்மையிலேயே அவை பொதுக் காரியங்களுக்கானவையாக இருந்தால்-- விதி விலக்கு அளிக்கப்படும்; ஆனால், இப்படிப்பட்ட நிலங்களின் பிரச்சினையில் தங்களுக்கு நியாயமெனத் தோன்றும் முறையில் மாநில அரசுகள் சட்டம் இயற்றலாம்.

மேய்ச்சல் பண்ணைகளுக்கும் விதி விலக்கு அளிக்கப்படும்.

பரிந்துரைகள் பரிசீலனை

சட்டம் 1971 சனவரி 24-ம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

உச்சவரம்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின், உபரியாகக் கிடைக்கக்கூடிய நிலங்களின் புள்ளிவிவரங்களை டிசம்பர் 13-ந் தேதி வாக்கில் தெரிவிக்கும்படி மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

உபரியாக இருக்கும் நிலங்களைப் பொதுமக்களின் நலனைக் கருதி மாநில அரசுகள் தங்கள் விருப்பம்போல் விநியோகிக்கலாம்.

பல்வேறு வகை நிலங்களுக்கும் ஏற்கனவே முடிவு செய்துள்ள உச்சவரம்புக்குள் அளிக்கக்கூடிய சலுகைகள் பற்றி முதலமைச்சர்கள் இறுதியாக அளிக்கும் பரிந்துரைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நட்ட ஈடு நிர்ணயம்

நட்டஈடு எவ்வாறு அளிக்கப்படும் என்பதை வேளாண்மைத் துறைத் துணையமைச்சர் ஏ. பி. ஷிண்டே விளக்குகையில் கூறியதாவது:—

"நட்டஈடானது இடத்துக்கு இடம் -- ஆளுக்கு ஆள் வேறுபடும்.

உபரி நிலங்களுக்கு நட்டஈட்டின் அளவைத் தீர்மானிக்கும் முன்பு அதைப் பெற்றுக்கொண்டவன் சக்தி கவனிக்கப்படும்; எப்படியும் மார்க்கெட் விலை விகிதப்படி நட்டஈடு தீர்மானிக்கப்படமாட்டாது.

மேலும், நிலத்தைப் பெறுபவர்கள் லகுவான தவணைகளில் அதைச் செலுத்த அனுமதிக்கப்படுவார்கள்.

உபரி நிலத்தை அளிப்பதில் தாழ்த்தப்பட்டவர்கட்கும் -- மலைவாழ் குடி மக்களுக்கும் முதல் சலுகை தரப்படும்.

எப்படியும் நிதியுதவிக்காக மாநில அரசுகள் மத்திய அரசின் உதவியை நாடவேண்டிய அவசியமில்லாத அளவுக்கு நட்டஈடு குறைத்து நிர்ணயிக்கப்படும்.

பாலைவனங்களிலும் மலைப் பகுதிகளிலும் மேல் வரம்பை மத்திய அரசாங்கத்திடம் கலந்து கொண்டு முதலமைச்சர்கள் நிர்ணயிக்கலாம்; சில தனிவகை நிலங்களைப் பொருத்தவரையில் 54 ஏக்கர் என்ற உச்சவரம்பு தளர்த்தப்படும்."

உற்பத்திக் குறையுமா?

"உச்சவரம்புச் சட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு உற்பத்தி குறையுமா?" என்று செய்தியாளர்கள் கேட்டபோது அமைச்சர் பக்ருதீன் அலி அகமது கூறியதாவது:—

"உற்பத்தி குறையாமல் மத்திய அரசும் மாநில அரசுகளும் பார்த்துக்கொள்ளும் விவசாயிகளுக்கு வேண்டிய உரம் போன்றவை குறைந்த விலையில் அளித்து -- உணவு உற்பத்திக் குறையாமல் பார்த்துக்கொள்ள மத்திய அரசும்--மாநில அரசுகளும் திட்டங்களை வகுக்கும்."

30 ஏக்கருக்குமேல் இல்லை

ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு மேல் இருந்தால் அதிகப்படியாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுநிலம் அதிகப்படியாக அனுமதிக்கப்படும்; ஆனால் மொத்தத்தில் எந்த குடும்பத்திற்கும் 30 ஏக்கருக்குமேல் போகக்கூடாது.

பிரச்சினைகள்மீது விளக்கம்

பழத்தோட்டங்கள் உயர்ந்த பட்ச அளவான 54 ஏக்கருக்கு மேல் பரப்புள்ளவை -- உபரி நிலம் பற்றி மாநில அரசு தகுந்த ஏற்பாடு செய்யும்வரை--துண்டுபடுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

அரசாங்கப் பண்ணைகள் -- பசுப் பண்ணைகள் பிரச்சினையில் மத்திய அரசைக் கலந்துகொண்டு மாநில அரசு முடிவு எடுக்கும்.

நட்டஈடு -- கிஸ்தி அடிப்படையிலோ அல்லது குத்தகை அடிப்படையிலோ இவ்வளவு மடங்கு என்று நிர்ணயிக்கப்படும்.

மாநில அரசு விரும்பினல்...

நில உச்சவரம்புச் சட்டம் 1971 சனவரி 24-ந் தேதியிலிருந்து செயலுக்கு வரவேண்டும் என்று பொதுவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; ஆனாலும், அதற்கு முந்திய ஒரு தேதியிலிருந்து சட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று எந்த மாநில அரசும் விரும்பினால், அந்தத் தேதியிலிருந்து சட்டத்தை அது செயலுக்குக் கொண்டு வரலாம்.

நகரச் சொத்துக்களுக்கு மேல்வரம்பு எப்போது?

நில உச்சவரம்புச் சட்டம் செயலுக்கு வரும் நாளிலிருந்தே நகரச் சொத்துக்கும் மேல்வரம்பு வரவேண்டும் என்று சில மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தினர்; சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் இதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டுத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பார்த்துக்கொள்ளப்படும்.

இரு முக்கிய மாறுதல்கள்

புதிய காங்கிரசுச் செயற்குழு செய்த முடிவுகளில் செய்யப்பட்ட இரு முக்கியமான மாறுதல்கள் -- தேயிலை, காபி, ஏலக்காய், ரப்பர் தோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதி விலக்கும், பழத் தோட்டங்களை புன்செய் போன்று கருதவேண்டும் என்பதுமாகும்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

மைசூர் 'கருநாடகம்' ஆகிறது!

பெங்களூர், சூலை 22—

மைசூர் மாநிலத்தின் பெயரைக் 'கருநாடகம்' என்று மாற்ற சட்டமன்றத்தில் ஓர் தீர்மானம் கொண்டு வருவதற்குக் கட்சித் தலைவர் தேவராஜ் அர்சுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு தீர்மானம் மைசூர் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் பெருவாரியான ஆதரவுடன் நிறைவேறியது.

131 உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்; அவர்களில் 89 பேர் தீர்மானத்தை ஆதரித்தனர்; கட்சியில் மொத்தம் 190 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

'மைசூர் -- கருநாடகம்' என்று பெயர் வைக்கலாம் அல்லது 'கன்னட நாடு' எனப் பெயரிடலாம் என இரு மாற்று யோசனைகள் தெரிவிக்கப்பட்டன; இவற்றில் முதல் யோசனைக்கு ஆதரவாக 22 வாக்குகளும், இரண்டாவது யோசனைக்கு ஆதரவாக ஒன்பது வாக்குகளும் தான் கிடைத்தன; 11 உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்ததாகத் தெரிகிறது; கட்சித் தலைவர் தேவராஜ் அர்ஸ், 'கருநாடகம்' என்ற பெயரை ஆதரித்து வாக்களித்தார்.

சுதந்தர வெள்ளி விழா

நள்ளிரவில் நாடாளுமன்ற நிகழ்ச்சிகள் விவரம்

புதுடில்லி, சூலை 24—

ஓராண்டு நடத்தப்படவிருக்கும் இந்தியாவின் சுதந்தர வெள்ளி விழா ஆக. 14-ந் தேதி நள்ளிரவில் நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் ஒரு விழாவுடன் தொடங்கும்; 25 ஆண்டுகளுக்குமுன் அந்த மண்டபத்தில்தான் அதிகார மாற்றம் நடந்தது.

நள்ளிரவில் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் கூட்டத்துக்கு குடியரசுத் தலைவர் வி. வி. கிரி தலைமை வகிப்பார்.

சுதந்தரப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் 2 நிமிட மௌனத்துடன் கூட்டம் தொடங்கும்.

பின்னர் குடியரசுத் தலைவர், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவைத் தலைவர் ஜி. என். தில்லான் ஆகியோர் பேசுவார்கள்; இந்த நிகழ்ச்சிகள் அப்போதே டெலிவிஷனிலும், வானொலியிலும் ஒலிபரப்பப்படும்.

புரட்சி நடிகருக்குப் பாராட்டு விழா

பொன்னுடை போர்த்தினர் நாவலர்

ம.பொ.சிவஞானம்--திருப்பூர் மொய்தீன் மற்றும் பலர் வாழ்த்துரை

சென்னை, சூலை 24—

அனைத்திந்திய சிறந்த நடிகருக்கான 'பாரத்' விருதும் பின்னர் சிறப்புப் பட்டமும் பெற்ற சமுகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கட்குப் பரங்கிமலைத் தொகுதியின் சார்பில் -- பல்லாவரத்தில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது.

பம்மல் நல்லதம்பி தலைமையில், கரிக்கோல்ராஜ் வாழ்த்துப் பாடலுடன் விழாத் தொடங்கியது.

புரட்சி நடிகரை பாராட்டிப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் பொன்னுடை போர்த்தினர்.

வெள்ளியினல் செய்யப்பட்ட பரங்கிமலை அமைப்பு ஒன்றும் வழங்கப்பட்டது.

மகளிர் மன்றத்தின் சார்பில் வெள்ளிக் கேடயம் வழங்கப்பட்டது.

நாவலருக்கும் -- புரட்சி நடிகருக்கும் பல்வேறு கிளைக் கழகங்கள் -- சார்பு மன்றங்கள் -- நகராட்சி, ஊராட்சிமன்றங்கள் சார்பில் மலர் மாலைகளும் -- கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

புரட்சி நடிகரைப் பொதுச்செயலாளர் நாவலர், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ., நடிகர் என். டி. ராமாராவ், ஆர். எம். வீரப்பன், பரந்தாமன் எம்.எல்.ஏ., தி. சு. இலட்சுமணன் எம்.பி., திருச்சி சௌந்தரராசன், திருவாரூர் தங்கராசு, ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் தர்மலிங்கம், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி, துணைச் செயலாளர் அகிலன், ஆலந்தூர் நகராட்சித் தலைவர் மோகனரங்கம், ஆலந்தூர் எஸ். பாலன், நகராட்சி உறுப்பினர் பாலகிருஷ்ணன், அனகாபுத்தூர் இராமலிங்கம் ஆகியோர் பேசினர்.

இறுதியில், புரட்சிநடிகர் எம்.ஜி. ஆர். அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினர்.

விழாவை முன்னிட்டு பல்லாவரம் நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது; வழிநெடுகிலும் கழகக் கொடிகள் -- தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] (24, [illegible] சென்னை-10) [illegible]